செயல்பட்டு வருகிறது. அதுவும் அப்பகுதி மக்கள் செல்லக்கூடிய வகையில் இல்லையென்பதால், கருணையுள்ளம் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்பகுதியில் புதிய மருத்துவமனையைக் கட்டித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, எவ்வளவு விரைவாக அந்தக் கட்டடத்தைச் சீரமைத்து, புதிதாகக் கட்டித் தரமுடியும் என்பதை அறிந்து, உடனடியாக அது செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவொற்றியூர் பகுதியைப் பொறுத்தவரையில், 6 இடங்களில் மருத்துவமனைகள் செயல்படுகின்றன. தினந்தோறும் 1,500 வெளி நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று செல்கிறார்கள். எனவே, அதனைக் கருத்தில்கொண்டு, விரைவில் அந்தப் பணியும் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள், நன்றி சொல்லுங்கள்.

திரு. கே.பி. சங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

157—

சிப்காட் தொழிற்பூங்கா

***9659—திரு. ஆ. வெங்கடேசன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

2022 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்கான உத்தேசம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள்.*

முற்பகல் 10–50

திரு. ஆ. வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு முக்கியத்துவம் அளித்து, உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூரில் பிரம்மாண்டமான வீர விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு விதி 110–ன்கீழ் அறிவிப்பினை அளித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர், தமிழினக் காவலர், கழகத் தலைவர் அவர்களுக்கு சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாடிப்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி முழுவதும் விவசாயம் மட்டுமே பிரதானத் தொழிலாக உள்ளது. அப்பகுதி மக்களின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாடிப்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் பயன்பாட்டிற்காகவும், அவர்களது பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் அப்பகுதியில் ஒரு தொழிற்பூங்கா அமைக்க முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகம் முழுவதும் பரவலாகத் தொழில் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வமும், அக்கறையும் கொண்டிருக்கிறார்கள். அதன் ஒரு பகுதியாகத்தான், கடந்த ஜனவரி மாதம் 21 ஆம்*

[2022 ஏப்ரல் 22

தேதியன்று மதுரை மாவட்டத்தில் SIPCOT மூலம் ஒரு தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை அவர்கள் வெளியிட்டார்கள். அதனைத் தொடர்ந்து நிதிநிலை அறிக்கையிலும், மதுரை மாவட்டத்தில் SIPCOT மூலம் ஒரு தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சோழவந்தான் பகுதியில் SIPCOT தொழிற்பூங்கா உருவாக்குவதற்கான சூழ்நிலைகளாக, அங்கு ஒருங்கிணைந்த நிலம் வேண்டும், போக்குவரத்து வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி போன்றவை வேண்டும். குறிப்பாக, அங்கு தொழிற்பூங்கா உருவாக்குவதற்குத் தேவையான தொழில் மனைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் உருவாகுமானால், நிச்சயமாக எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள்.*

திரு. ஆ. வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி முழுவதையும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அந்தப் பகுதியில் நான்கு வழிச்சாலைகள் மற்றும் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய போதுமான இட வசதிகளும் இருக்கின்ற காரணத்தினால், அப்பகுதி இளைஞர்களின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் கருத்தில்கொண்டு, அப்பகுதியில் SIPCOT தொழிற்பூங்காவினை நிறுவிட அரசு முன்வரவேண்டும் என்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள வாடிப்பட்டியிலிருந்து அருகே இருக்கக்கூடிய நிலக்கோட்டை 15 அல்லது 20 கி.மீ. தூரத்தில் இருக்கும். ஏற்கெனவே அங்கு 387 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு SIPCOT தொழிற்பூங்கா இருக்கிறது. அந்தப் பகுதியின் தொழில்முனைத் தேவைகளை அந்த இடம் தற்போது பூர்த்தி செய்துகொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் இதற்கான*

2022 ஏப்ரல் 22]

தேவை உருவாகுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, கும்மிடிப்பூண்டி தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கும்மிடிப்பூண்டி தொகுதி விவசாய நிலங்கள் அதிக அளவில் இருக்கின்ற பகுதியாகும். அந்தப் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு அதிக அளவில் பயிரிடப்படுகின்றது. அதேபோன்று பூச்செடிகளும் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. அந்தப் பகுதியில் ஜவ்வரிசி தயாரிக்கக்கூடிய sago தொழிற்சாலையும், scent தயாரிக்கக்கூடிய scent தொழிற்சாலையும் அமைத்துத் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே சர்க்கரை ஆலை அமைப்பதற்காக 60 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு அது நிலுவையில் இருக்கிறது. அந்த நிலத்தைப் பயன்படுத்தி, அந்தப் பகுதியில் தொழிற்சாலை அமைக்கலாம் எனவும், ஏற்கெனவே அங்கு SIPCOT பயன்பாட்டில் இருப்பதால், அந்தப் பகுதியிலும் தொழிற்சாலை அமைப்பதற்கு சரியாக இருக்கும் என்பதனால்,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்"

என்பதுபோல் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு வழியை வகுக்குமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம் தொழில் வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றிருக்கக்கூடிய மாவட்டமாக இருக்கிறது. பல்வேறு தொழிற்சாலைகள், அது மின்சார வாகன தொழிற்சாலைகளாக இருந்தாலும் சரி அல்லது electronics தொழிற்சாலைகளாக இருந்தாலும் சரி, பல புதிய தொழிற்சாலைகள்

அந்த மாவட்டத்திற்கு வரக்கூடிய நல்வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. அந்த மாவட்டம் இன்றைக்கு பாதுகாப்பு வழித்தடத்திலும் ஒரு முனையமாக உருவாகிக்கொண்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல், அந்த இடத்தில் சர்க்கரைத் தொழிற்சாலையோ, scent தொழிற்சாலையோ அல்லது மரவள்ளிக்கிழங்கு தொழிற்சாலையோ வரவேண்டுமானால், அந்த தொழிற்சாலைகளை அங்கு அமைப்பதற்கு ஏதேனும் தொழில் நிறுவனங்கள் முன்வந்தால், தொழில் துறை அதற்கான அனைத்து வாய்ப்புகளையும், வசதிகளையும் அவர்களுக்கு உருவாக்கித் தந்து, அந்தத் தொழில்களை அவர்கள் அங்கு துவங்குவதற்கான ஊக்குவிப்பினை நிச்சயமாக வழங்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த ஆண்டும் திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு புதிய தொழிற்பூங்காவினை அமைப்பதற்கான ஓர் அறிவிப்பினை நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது மாவட்ட தொழில் வளர்ச்சிக்கு நிச்சயமாக அரசு அனைத்து வகைகளிலும் உதவியாக இருக்கும்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

158—

மயானக் கொட்டகை

***2761—திரு. R. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதி, கீழக்குறிச்சி கிராமத்தில் மயானக் கொட்டகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றியம், கீழக்குறிச்சி கிராமத்தில் மயானக் கொட்டகை 2021–2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ்